2010 நவம்பர் 9]

தெரிவித்து அதற்கான சிறப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. கடந்த ஆண்டு அந்த விருதுகளை வழங்குவதற்கான தகுதியை தமிழ்நாட்டினுடைய தகவல் ஆணையம் பெறவில்லை என்ற செய்தியும் வந்திருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று அறிய ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், கடந்த ஆண்டு எத்தனை கேட்புகள் வந்திருக்கின்றன; எத்தனை கேட்புகளுக்கு அதிகாரிகள் தகவல்களைத் தந்திருக்கிறார்கள்; மாநில தகவல் ஆணையத்திற்கு எத்தனை மேல் முறையீடுகள் வந்திருக்கின்றன; அவற்றில் எத்தனை நிறைவேற்றப்பட்டு அவற்றுக்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்திலே அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள்.

இரண்டாவது கேள்வியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எத்தனை கேட்புகள் வந்திருக்கின்றன, எத்தனை கேட்புகளுக்கு விளக்கம் அளித்தார்கள் என்று விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குறித்து தனிக் கேள்வி கேட்டால் அது குறித்த புள்ளிவிவரங்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

4—

தொழில்நுட்பக் கல்லூரி

***107309—திரு. பெ. மோகன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 நவம்பர் 9

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.*

திரு. பெ. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அங்குள்ள மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரியிலோ, அல்லது பலவகை தொழில்நுட்பக் கல்லூரியிலோ மேற்படிப்பு படிக்க வேண்டுமென்றால், சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ள தூத்துக்குடிக்கோ அல்லது 50 கி.மீ. தொலைவில் உள்ள கோவில்பட்டிக்கோ அல்லது திருநெல்வேலிக்கோதான் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மாணவர்களின் நலன் கருதி ஒட்டப்பிடாரத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்திட இந்த அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதியினை உள்ளடக்கிய தூத்துக்குடி மாவட்டத்தில் இப்போது இரண்டு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே,* shift system *நடைமுறையில் இருக்கின்றது. அதனால், அதிகமான மாணவர்கள் அங்கு சேர்ந்திருக்கின்றார்கள்.*

2010 நவம்பர் 9]

ஆறு சுயநிதிக் கல்லூரிகள் அங்கே இருக்கின்றன. இந்த ஆறு கல்லூரிகளில் 175 இடங்கள் காலியாகவே இருக்கின்றன. ஆகவே, பல்வேறு மாவட்டங்களில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இல்லாத சூழலில் தூத்துக்குடி மாவட்டத்தில், இரண்டு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக அதைப்பற்றி பரிசீலிக்க வாய்ப்பு இல்லை. மத்திய அரசாங்கம் பின்தங்கிய பகுதிகளில், கலைக் கல்லூரிகளைத் தொடங்குவதற்காக அனுமதி அளித்துள்ளது. அந்தப் பட்டியலில் தூத்துக்குடி மாவட்டமும் சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.

திரு. பெ. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் ஓட்டப்பிடாரம் பக்கத்தில் உள்ள நாகம்பட்டியில் மனோ கல்லூரி அமைக்கப்பட்டு ஏராளமான பின்தங்கிய மாணவர்கள் அங்கு பயின்று வருகின்றார்கள். அதேபோன்று மிகவும் கஷ்டப்படும் மாணவர்களின் நலன் கருதி ஓட்டப்பிடாரத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்மூலமாக நெல்லையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், மாண்புமிகு மாவட்டச் செயலாளர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கவும் இரண்டு கல்லூரிகள் அங்கே அந்தப் பல்கலைக்கழகத்தின்மூலமாக தொடங்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் தொடங்கியது ஒன்று. இப்போது அங்கு இரண்டு கல்லூரிகளைத் தொடங்கியிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலே

[2010 நவம்பர் 9

பன்னிரண்டு பொறியியல் கல்லூரிகள் அரசுத் தரப்பிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. இதுவரை சுதந்திரம் அடைந்ததிலிருந்து, இந்தியாவில் அரசு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை மொத்தமே 6 தான். இந்த நான்கு ஆண்டுகளில், இப்போது இந்த ஆண்டினையும் சேர்த்து, 12 அரசு பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கின்ற அரசு தமிழக அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

கட்டட வசதி

***116614—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென தகுந்த நிலத்தினைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உரிய நிலம் கிடைத்தவுடன் இவ்வலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.